## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**06.01.2026**

OS. No.169/2014

பக்கம் – 2

PW1 – ஜெகதீசன்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது பக்க கூடுதல் முதல் விசாரணையை கூடுதல் நிருபண பத்திரிக்கையாக தாக்கல் செய்கிறேன். 10.05.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 16.11.2013 தேதியிட்ட வாதி காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகாரின் அலுவலக நகல் மற்றும் அசல் அஞ்சலக ரசீதுடன் கூடியது வா.சா.ஆ.2 ஆகும். 30.08.2006 தேதியிட்ட அ.வ.எண். 155/2003 என்ற வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும். அ.வ.எண். 155/2003 என்ற வழக்கின் தாவா பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும். அ.வ.எண்.109/2003 என்ற வழக்கில் இடைநிலை மனு எண்.485/2008 என்று மனு மற்றும் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுடன் கூடியதின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். 27.03.2013 தேதியிட்ட ஜீவா அம்மாளின் இறப்பு சான்றிதழின் அசல் வா.சா.ஆ.6 ஆகும்.

(மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்ய வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்